# பைபிள் வசனங்கள்

1




சங்கீதம் 34:7
கர்த்தருடைய தூதன் அவருக்குப்
பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி
அவர்களை விடுவிக்கிறார்.

## சங்கீதம் 91:11

# உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.





நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர்
கேட்டு, அவர்களை அவர்களுடைய
எல்லா உபத்திரவங்களுக்கும்
நீங்கலாக்கிவிடுகிறார்.
சங்கீதம் 34:17

## சங்கீதம் 91:15

அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான்,
நான் அவனுக்கு மறுஉத்தரவு
அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே
அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து,
அவனைக் கனப்படுத்துவேன்.




சங்கீதம் 133:1
இதோ, சகோதரர் ஒருமித்து
வாசம்பண்ணுகிறது எத்தனை
நன்மையும் எத்தனை இன்பமுமானது?


ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை
நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய
சபையை எப்படி விசாரிப்பான்?
1 தீமோத்தேயு 3:5


பிள்ளையானவன்
நடக்கவேண்டிய
வழியிலே அவனை
நடத்து; அவன்
முதிர்வயதிலும்
அதை
விடாதிருப்பான்.
நீதிமொழிகள் 22:6


உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக்
கொடுக்கிற தேசத்திலே உன்
நாட்கள் நீடித்திருப்பதற்கு,
உன் தகப்பனையும்
உன் தாயையும்
கனம்பண்ணுவாயாக.
யாத்திராகமம் 20:12


பிள்ளைகளே,
உங்கள்
பெற்றோருக்கு
எல்லாக்
காரியத்திலேயும்
கீழ்ப்படியுங்கள்;
இது கர்த்தருக்குப்
பிரியமானது.
கொலோ. 3:20


நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல்
ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில்
பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன்.
மத்தேயு 18:3

# பைபிள் வசனங்கள்

1

